## தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களுக்கான

# ‘சமூக ஊடகச் சவால்கள்’ எனும் 3 நாள் பயிற்சிப் பட்டறையின் நிறைவு விழா!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்!




சென்னை கலைவாணர் அரங்கில், ஊடக சவால்களை எதிர்கொள்வது குறித்து நாட்டு நலப்பணித் திட்ட மாணாக்கர்களுக்கு நடைபெற்ற 3 நாள் பயிற்சி பட்டறையின் நிறைவு நாளில் துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.9.2025) கலந்து கொண்டு தலைமையுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யமிஸ்ரா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப்யாதவ்., கல்லூரிக் கல்வி இயக்குநரக ஆணையர் மற்றும் மாநில நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி சுந்தரவல்லி, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, நாட்டு நலப்பணித் திட்ட மாநில ஒருங்கிணைப்பாளர் குணாநிதி, தகவல் சரிபார்ப்பகம் இலக்கு இயக்குநர் ஐயன்கார்த்திகேயன், நாட்டுநலத் திட்ட நிருவாகிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் நாட்டுநலத்திட்ட மாணவ, மாணவிகள் உடனிருந்தனர்.

**சென்னை,செப்.5-**

***சென்னை கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களுக்கான சமூக ஊடகச் சவால்கள் (Challenges of Social Media) எனும் 3 நாள் பயிற்சிப் பட்டறையின் நிறைவு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.***

***அப்போது அவர், ``தமிழ்நாடு ஃபேக்ட் செக்கிங் யூனிட் சார்பில் வழங்கப்படுகிற இப்பயிற்சியை பெறுகிற என்.எஸ்.எஸ். (NSS) மாணவர்கள், பொய்ச் செய்திகளை வீழ்த்தும் வகையில், விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்” என அப்போது குறிப்பிட்டார்.***

**இதுகுறித்து அவரது உரை வருமாறு:**

நாட்டுப்பணித் திட்ட மாணவர்களுக்கான ஃபேக்ட் செக்கிங் யூனிட் சார்பில் நடைபெறும் பயிற்சிப் பட்டறை நிறைவு விழாவில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைக் கொடுத்தமைக்கு அதிகாரிகளுக்கும், ஃபேக்ட் செக் யூனிட்டை சேர்ந்தவர்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**என்.எஸ்.எஸ் to மக்கள் பணி**

உங்களையெல்லாம் பார்க்கும்போது என்னுடைய பள்ளி, கல்லூரி நாட்கள் ஞாபகம் வருகின்றன. நான் பள்ளியில் படிக்கும்போது என்.சி.சி.-யில் சேர்ந்துவிட வேண்டும் என்று மிகவும் முயற்சித்தேன். அதற்கு விண்ணப்பித்தேன். ஆனால், என்னை நிராகரித்துவிட்டார்கள். அதன் பிறகு வேறு வழியில்லாமல் என்.சி.சி-ஐ விட்டுவிட்டு, என்.எஸ்.எஸ்சில் சேர்ந்தேன். என்.எஸ்.எஸ்-சில் பயிற்சி எடுத்த பிறகு, இன்றைக்கு தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக நம் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மக்கள்பணியை ஆற்றிக்கொண்டு இருக்கிறேன்.

**ஒரு கோடி ரூபாயாக உயர்வு**

எனது மக்கள் பணிக்குத் தொடக்கப் புள்ளியாக இருந்தது நம்முடைய என்.எஸ்.எஸ் என்று சொன்னால், அது மிகையாகாது. இன்றைய தலைமுறையினர் பலப்பேர் பொழுதுபோக்கு, கொண்டாட்டம், அலைபேசி எனச் சென்றுகொண்டு இருக்கிறார்கள். ஆனால், நீங்கள் நாட்டு நலப்பணித் திட்டத்தில் சேர்ந்து, மக்களுக்கு நாட்டு நலப்பணிகளைச் செய்கிறீர்கள். அப்படிப்பட்ட உங்கள் அத்தனை பேரையும் எவ்வளவு பாராட்டினாலும் போதாது. அதனால்தான், நம் திராவிட மாடல் அரசு நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கென்று தனியாக பல மாநிலங்களில் இல்லாத அளவுக்கு ஏராளமான திட்டங்களை, நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், பேரிடர் காலங்களில் உயிரை பனயம் வைத்து, மக்களைக் காப்பாற்றுகிற நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கான வருடாந்திர ஊக்கத்தொகை முன்பு 50 லட்சம் ரூபாயாக இருந்தது, அதை நம் முதலமைச்சர் அவர்கள் ஒரு கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள்.

**விமானத்தில் பயணம்**

இங்கு வந்திருக்கின்ற அனைத்து என்.எஸ்.எஸ் மாணவர்களுக்கும் தெரியும். முன்பெல்லாம் மூன்று வருடங்களுக்கு முன்பு குடியரசு தின அணிவகுப்பு டெல்லியில் நடக்கும். அதற்கு ஒவ்வொரு முறையும் இரயிலில்தான் சென்று வருவார்கள். பலமுறை, நான் என்.எஸ்.எஸ் மாணவர்களைச் சந்திக்கும்போது அவர்கள் சொல்வார்கள். மற்ற மாநிலங்களில் இருந்தெல்லாம் டெல்லிக்கு இரயிலில் வந்துவிடுகிறார்கள். நாங்கள் தமிழ்நாட்டில் இருந்து செல்வதற்கு, மூன்று நாள்கள், வருவதற்கு மூன்று நாள்கள் பயணத்திலேயே எங்களுக்குச் சென்று விடுகிறது, சோர்வாகி விடுகிறது என்று சொன்னார்கள். இதை முதலமைச்சரின் கவனத்துக்கு எடுத்துச் சென்றேன்.

முதலமைச்சர் அவர்கள், உடனே ஒரு ஆணையைப் பிறப்பித்தார்கள். அது என்னவென்றால், இனி, தமிழ்நாட்டு என்.எஸ்.எஸ்.மாணவர்கள் இரயிலில் டெல்லிக்குச் செல்ல தேவையில்லை. அனைவருக்கும் தனியாக விமானத்தில் டிக்கெட் போட்டு குடியரசு தின விழாவில் அவர்கள் அத்தனை பேரும், புத்துணர்ச்சியுடன் அவர்களின் முழுத்திறமையையும் வெளிப்படுத்த வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் அந்த உத்தரவைப் பிறப்பித்தார்கள்.

நம் முதலமைச்சரின் உத்தரவினால், சில ஆண்டுகளாக நீங்கள் விமானத்தில் சென்று குடியரசு தின விழா அணிவகுப்பில் கலந்து கொண்டு மிகப்பெரிய சாதனைகளைச் செய்து வருகிறீர்கள். அதேபோல் உங்களுக்கு என்.எஸ்.எஸ்.சில் எவ்வளவோ பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மூன்று நாட்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பயிற்சி மிகமிக முக்கியமானது என்று, இங்கு இரண்டு என்.எஸ்.எஸ். மாணவர்கள் பேசியதை வைத்து, புரிந்துகொண்டு இருப்பீர்கள்.

இன்று அனைத்துமே சமூக வலைதளமாகிவிட்டது. அதில் மிகப்பெரிய அளவில் பொய் செய்திகளையும், வதந்திகளையும் பல பேர் பரப்பிக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு உண்மை எவ்வளவு சீக்கிரம் சென்று சேர்கிறதோ, அதைவிட இரண்டு மடங்கு வேகமாக ஒரு பொய் செய்தி சுலபமாக மக்களிடம் சென்றடைந்துவிடுகிறது.

**பொய்ச் செய்திகள்**

இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற ஒரு பாசிச கும்பல் பொய் செய்திகளைப் பரப்புவதையே ஒரு அடிப்படைக் கொள்கையாக, முழு நேர வேலையாகச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அது யார் என்று உங்களுக்குச் சொல்ல தேவையில்லை. பொய் செய்திகள் மூலம் மக்களை குழப்ப வேண்டும், அவர்களின் அறிவை மழுங்கடிக்க வேண்டும் என்பதற்காக, அதையே ஒரு நோக்கமாக வைத்து, பொய் கதைகளையும், கட்டுக் கதைகளையும் அவிழ்த்து விட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

பொய் செய்திகளை எப்படிக் கையாள வேண்டும் என்ற கேள்வி இன்றைக்கு உலகம் முழுவதும் எழுந்துள்ளது. வதந்திகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று `மிஸ் இன்பர்மேஷன்’, இன்னொன்று `டிஸ் இன்பர்மேஷன்’. `மிஸ் இன்பர்மேஷன்’ என்பது எந்த உள்நோக்கமும் இல்லாமல் பரவுகின்ற செய்தி, ஆனால் இந்த `டிஸ் இன்பர்மேஷன்’ என்பது திட்டமிட்டு, உள்நோக்கத்துடன் பரப்பப்படுகின்ற பொய் செய்தி.

**மிகப்பெரிய ஆபத்து**

மிஸ் இன்பர்மேஷனை விட, டிஸ் இன்பர்மேஷன் மிகமிக ஆபத்தானது. குறிப்பாக, குளோபல் ரிஸ்க் ரிபோர்ட்-2024 அவர்களது அறிக்கையின்படி உலகத்தில் இருக்கின்ற மிகப்பெரிய ஆபத்துகளில் 2-வது இடத்தில் இருக்கக்கூடியது டிஸ் இன்பர்மேஷன்தான். இன்றைக்கு 2-வது இடத்தில் டிஸ் இன்பர்மேஷன் இருக்கலாம், ஆனால், இன்னும் 2 ஆண்டுகள் கழித்து இந்த டிஸ் இன்பர்மேஷன் மற்றும் மிஸ் இன்பர்மேஷன் இரண்டும்தான் உலகத்திலேயே மிகப்பெரிய ஆபத்தாகவும், அச்சுறுத்தலாகவும் மக்களுக்கு இருக்கப் போகிறது.

பொய் செய்திகள் மட்டுமல்ல, இன்றைக்கு வெறுப்புப் பேச்சும் பெரிய அளவில் மக்களையும் நம்முடைய நாட்டையும் பாதித்து இருக்கின்றன. குறிப்பாக, அவர்களின் வெறுப்புப் பேச்சுகளால், சிறுபான்மை இன மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்ற சூழலை இன்றைக்கு ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இதற்கு நாட்டில் பல உதாரணங்களைச் சொல்லலாம். சில வருடங்களுக்கு முன்பு, வட மாநிலங்களில் `பீஃப் சாப்பிடுகிறார்கள்’, `பீஃப் வைத்திருந்தார்கள் என்று கும்பல், கும்பலாக சேர்ந்து மக்களை அச்சுறுத்தியதை நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். வடமாநில தொழிலாளர்கள், தமிழ்நாட்டில் தாக்கப்படுகிறார்கள் என்று சில வருடங்களுக்கு முன்பு வதந்தி பரப்பினார்கள்.

உடனே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்ன செய்தார் என்றால். அங்கு இருக்கக்கூடிய அலுவலர்களை எல்லாம் வரவழைத்து, வட மாநில தொழிலாளர்கள் இருக்கிற இடங்களுக்கு எல்லாம் அவர்களை அனுப்பி வைத்து, அரசு சார்பாக அவங்களைக் கொண்டுபோய் காட்டினோம். அவர்கள் எல்லாம் பாதுகாப்பாக இருக்கிறார்கள், அவங்களுக்கு எந்த விதமான இடையூறும் இல்லை என்பதை உறுதி செய்தார்கள். அவர்கள் இங்கு பாதுகாப்புடன் இருக்கிறார்கள் என்று பீகார் அதிகாரிகள் உறுதி செய்தார்கள்.

**சந்திக்க நான் தயார்**

அதுமட்டுமல்ல, எனக்கே இந்த பிரச்சினை நடந்தது. ஒரு மூன்று வருடங்களுக்கு முன்பு நான் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். அந்த நிகழ்ச்சியில் நான் பேசியது, `பிறப்பால் யாரும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் கிடையாது. பிறப்பால் ஏற்றத் தாழ்வு கிடையாது. அப்படி ஒன்று இருந்தது என்றால் அதை ஒழித்து கட்ட வேண்டும்’ என்று பேசினேன். ஆனால், அதையும் திரித்து, நான் ஒரு இனப்படுகொலையைத் தூண்டி விட்டுவிட்டேன். ஒரு ஜெனோசைடை கிளப்பி விட்டுட்டேன் என்று, என் மேலும் பொய் செய்திகளைப் பரப்பினார்கள். என்னுடைய பேச்சைத் திரித்து நான் சொல்லாத விஷயத்தைச் சொன்னேன் என்று ஒரு கும்பல் நாடு முழுக்க அந்த வதந்தியைப் பரப்பியது. அதற்காக என்னுடைய தலையை சீவி கொண்டு வந்தால், ஒரு சாமியார், `10 லட்சம் தருகிறேன்’ என்று சொன்னார். இன்னொரு சாமியார் அதுக்கு போட்டி போட்டுக் கொண்டு, `உதயநிதி தலையை சீவிக்கொண்டு வந்தால், நான் 10 லட்சம் இல்லை, ஒரு கோடி ரூபாய் தருகிறேன்’ என்று என்னுடைய தலைக்கு விலை பேசினார்கள்.உடனே மன்னிப்பு கேட்க வேண்டும்’ என்று சொன்னார்கள். நான் சொன்னேன், ``மன்னிப்பு கேட்க முடியாது. நீங்கள் யாரை வேண்டுமானாலும் சென்று பார்த்துக்கொள்ளுங்கள், எந்த நீதிமன்றத்துக்கு வேண்டுமானாலும் செல்லுங்க்ள், எந்த வழக்கையும் சந்திக்க நான் தயார், நான் பேசியதில் எந்தத் தப்பும் கிடையாது” என்று சொன்னேன்.

> **“இது தந்தை பெரியார் அவர்களால் பண்படுத்தப்பட்ட மண். தந்தை பெரியார் அவர்கள் என்ன சொல்லிவிட்டு சென்றிருக்கிறார்? அவர் என்ன சொன்னார்? ஒரு விஷயத்தை யார் சொன்னாலும், ஏன் அதை நானே சொன்னாலும், அதை நீ நம்பாதே என்று சொன்ன ஒரே தலைவர் தந்தை பெரியார் அவர்கள் தான்.”**

மற்ற மாநிலங்கள் போல தமிழ்நாடு எதையும் உடனே நம்பாது என்பதற்கு இங்கு வந்திருக்கக்கூடிய மாணவச் செல்வங்கள் நீங்கள்தான் அதற்கு சாட்சி. இதற்கு மிக மிக முக்கிய காரணம் என்னவென்றால், இது தந்தை பெரியார் அவர்களால் பண்படுத்தப்பட்ட மண். தந்தை பெரியார் அவர்கள் என்ன சொல்லிவிட்டு சென்றிருக்கிறார். அவர் என்ன சொன்னார். ஒரு விஷயத்தை யார் சொன்னாலும், ஏன் அதை நானே சொன்னாலும், அதை நீ நம்பாதே என்று சொன்ன ஒரே தலைவர் தந்தை பெரியார் அவர்கள்தான்.

தந்தை பெரியார் அவர்கள் இன்னொன்றும் சொன்னார். `உன்னுடைய பகுத்தறிவுக்கும், புத்திக்கும் எது சரி என்று படுகிறதோ அதை மட்டும் நீ ஏற்றுக்கொள், இல்லையென்றால் ஏன், எதற்கு என்று எதிர்த்து கேள்வி கேள்’ என்றுச் சொன்னார். அந்த வழியில் இன்றைக்கு பொய் செய்திகளைத் தடுக்க வேண்டும் என்று அதைப்பற்றிய விழிப்பு உணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலுடன் அரசு சார்பாக, ஒரு அர்ப்பணிப்புடன்இந்தப் பணி (டெடிகேட்டேட் ஃபேக்ட் செக்கிங் யூனிட்) தொடங்கப்பட்டது.

**சமூக வலைதளம்**

இன்றைக்கு தமிழ்நாடு ஃபேக்ட் செக்கிங் யூனிட் செயல்படுகிற வேகத்தைப் பார்த்து, பொய் செய்திகளைப் பரப்புகின்ற கும்பல் சிலர் பதற்றமடைந்துள்ளனர். கடந்த ஆண்டுகளை விட, சமீபகாலமாக பொய் செய்திகள் பரவுவது, தமிழ்நாட்டில் மிகவும் குறைந்துள்ளது. அது அடியோடு நிறுத்தப்பட வேண்டும். அதற்காக ஃபேக்ட் செக்கிங் யூனிட்டுக்கு எனது பாராட்டுகள், வாழ்த்துகளை உங்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பொய் செய்திகளை எப்படிக் கையாளுவது என்று, மாணவர்கள், அரசு அதிகாரிகள், பேராசிரியர்கள் என்று இந்த மூன்று ஆண்டுகளில் கிட்டத்தட்ட 47,000 பேருக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் தொடர்சியாகத்தான் இன்றைக்கு இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்கிற நீங்கள் உங்களுடைய நண்பர்கள், குடும்பத்தினர், உங்களுக்கு தெரிந்தவர்களிடமெல்லாம் இதைப்பற்றிப் பேச வேண்டும். இனிமேல் நீங்கள் ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிவிட்டர் போன்ற சமூக வலைதளத்தில் சென்றீர்கள் என்றால், அதில் ரீல்ஸ் எல்லாம் பார்த்துவிட்டு, எது ரீல், எது ரியல் என்பதை நீங்கள் பகுத்தறிந்து யோசிக்க வேண்டும்.

முக்கியமாக, நீங்க எல்லோரும் பொய் செய்திகளை வீழ்த்துகிற போர்வீரர்களாக களத்தில் நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொய்கள் வீழட்டும், உண்மை ஓங்கட்டும், பொய் செய்திகளற்ற சமூகத்தை அமைப்போம் என்று சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஷ்ரா ஐ.ஏ.எஸ்., பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., கல்லூரி கல்வி இயக்குநரக ஆணையர் சுந்தரவள்ளி ஐ.ஏ.எஸ்., இளைஞர் நலத்துறையின் இயக்குநர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., என்.எஸ்.எஸ் மாநில ஒருங்கிணைப்பாளர் குணாநிதி, தமிழ்நாடு ஃபேக்ட் செக் யூனிட்டின் விஷன் டைரக்டர் அயன் கார்த்திகேயன் உள்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.




நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்ற தொகுதி – கூடலூர் நகரம்,சேருங்கோடு, தேவர்சோலை, நெல்லியாளம் ஆகிய 4 பகுதிகளில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட சிறப்பு முகாமினை, தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன்,கூடலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பரமேஷ் குமாருடன் நேரில் பார்வையிட்டு, பொதுமக்களுடன் முகாமின் சிறப்பம்சம் பற்றி கலந்துரையாடி முகாமில் உடனடியாக தீர்வு காணப்பட்ட பல்வேறு மனுக்களை ஆராய்ந்து பயனாளிகளுக்கு அதற்கான சான்றிதழ்களை வழங்கினர்.



சேலம் மாவட்டம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி அருகில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் பல்நோக்கு விளையாட்டரங்கத்தில் நடைபெற்று வரும் உள்விளையாட்டரங்கம், நீச்சல் குளம் மற்றும் பாரா ஒலிம்பிக் திடல் அமைக்கும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று முன்தினம் (03.09.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி வாணி ஈஸ்வரி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.